# Resemblance between Paganism and Roman Catholicism.

# இந்துமத பாப்புமத சம்பந்ததீபம்.

இத்தேசங்களிலுள்ள இந்துமதத்தார் அஞ்ஞான இருளிலே அமிழ்ந்திருப்பதினால் ஒன்றான மெய்த் தேவன் ஆரென்றும் அவர் அருளிய சத்திய வேதம் யாதென்றும் அறியாமல் தங்கள் முன்னோர்களைப் போலவே விக்கிரகங்களை வணங்குவதினால் ஆத்தும ஈடேற்றமடையலாமென்றெண்ணி விக்கிரகாராதனையையும் அதனோடிசைந்த பற்பல சடங்குகளையுஞ் செய்து தேவகோபாக்கினைக்கேதுவானவர்களாயிருப்பதை நாங்கள் அறிந்து மிகவுந் துயரப்பட்டு அவர்கள் மெய்த் தேவனையும் உலக இரட்சகராய் அவதரித்த தேவ சுதனாகிய இயேசுக்கிறிஸ்துவையும் பின்பற்றி விசுவாசித்து இம்மையில் மனப்பாக்கியத்தையும் மறுமையில் நித்திய மோட்சானந்தத்தையும் அடையும்படி அவர்களுக்குச் சத்திய வேதமாகிய சுவிசேஷத்

1st Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [10,000
1842.

தைப் போதித்துவருகிறோம். தேவ கிருபையினாலே அம்முயற்சி வீணாகாமல் அநுகூலப்பட்டுவருகின்றதென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆனாலும் மேற்சொல்லிய இந்துக்கள் குணப்படுவதற்கான பிரயத்தனங்களை நாங்கள் செய்துவரும்போது அவர்களாலே வரும் இடையூறுகள் இருந்தாலும் பாப்பு மார்க்கத்தாராகிய உங்களாலே உண்டாகின்ற தடை மிகவும் பெரிதாயிருக்கின்றது. அதென்னவென்றால், இந்து மதத்தார் செய்து வருகிற விக்கிரகாராதனையும் மற்றுஞ் சடங்குகளும் வீணென்பதை அவர்களுக்குத் திட்டாந்தத்துடனே காட்டிப்போதிக்கும்போது அவர்கள் எங்களை நோக்கி நீங்கள் போதித்து வருவது சரிதான், ஆகிலும் உங்கள் மதத்தாரிற் சிலர் எங்களைப்போல விக்கிரகாராதனையையும் மற்றுஞ் சடங்குகளையுஞ் செய்து வருகிறார்கள் அவர்களுக்கே முந்திப் புத்திசொல்லாமற் புறச் சமயிகளாகிய எங்களுக்குப் புத்தி சொல்லவேண்டியதென்னவென்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற இப்படிப்பட்ட ஆட்சேபத்தை எவ்விதமாய் நிராகரணம் பண்ணுவோமென்று பல முறையுங் கலங்கி மௌனமடைந்ததுண்டு. ஆதலால் அந்த இந்து மதாநுசாரிகளென்று உங்களையும் அவர்களோடே சேர்த்து இருதிறத்தாருஞ் சத்தியமார்க்கவிரோதிகளென்று சொல்லி வெறுப்போமோ, அல்லது நீங்களும் நாங்களும் ஒன்றுதானென்றுசொல்லி உங்கள் வழக்கை எங்கள் வழக்காக எண்ணிப்பேசி உங்களை அநுசரிப்போமோ? இதை

ப் போலச் சங்கடம் வேறொன்றும் இல்லையே. உங்களை அனுசரிப்போமெனில் எங்கள் மனச்சாட்சிக்குஞ் சத்திய வேதத்திற்கும் விரோதிகளாவோமோ? உங்களை இந்துக்களோடே சேர்த்து வெறுப்பது எங்களுக்கு நியாயமாயினும் அப்படிச் செய்யவும் எங்களுக்கு மனம்வரவில்லையே, இதற்கென்னசெய்வோமென்று எங்களுக்குத் தோன்றவில்லை.

ஆதலால் பாப்பு மார்க்கத்தாராகிய நீங்கள் அஞ்ஞானக்கிரியைகள் யாவையும்விட்டு உங்களைச் சுத்திகரித்துச் சத்திய நெறியாகிய சுவிசேஷத்தை அனுசரித்து நடப்பீர்களாக. அப்பொழுது கத்தர் மகிமைப்படுவார், நீங்கள் நன்மையடைவீர்கள் நாங்களுஞ் சந்தோஷிப்போம். அஞ்ஞானிகளுங் குணப்படுதற்கேதுவாவார்கள். இதற்கு நீங்கள் நாங்கள் என்ன அஞ்ஞானக் கிரியைகளைச் செய்து வருகிறோம், அப்படியொன்றுஞ் செய்யாதிருக்க எங்களைக் குற்றப்படுத்திக் குணப்பட வேண்டுமென்று சொல்லுகிறதென்னவென்பீர்கள். நீங்கள் அஞ்ஞானக் கிரியைகளைச் செய்துவருகிறீர்களோ இல்லையோவென்பது பின்னுஞ் சொல்லப்படுகிற சில காரியங்களினாலே தெளிவாய் விளங்கும். உங்களை இகழவுங் கோபம் மூட்டவும் இதைச் சொல்லாமல் நீங்கள் நிற்கிற மோசமான நிலைமையை உங்களுக்குத் தெரியக்காட்டும்படி இதைச் சொல்லுகிறோம். ஆகையால் நீங்களும் விருப்பத்துடனே இதை வாசிக்கும்படியாய்ப் பிரார்த்திக்கிறோம்.

௧. இந்துக்கள் பொன், வெள்ளி, செம்பு, கல், மரம் முதலியவைகளால் விக்கிரகங்களைச் செய்து வைத்து அவைகளுக்குமுன் விழுந்து பணிவதுபோல நீங்களும் மரம், தந்தம் முதலியவைகளால் விக்கிரகங்களைச் செய்து அவைகளைப் பணிகிறீர்கள்.

௨. இந்துக்கள் வீணான பற்பல உற்சவங்களை நடப்பித்து இரதம் சப்பரம் முதலானவைகளை அலங்கரித்து அவைகளின் மேல் விக்கிரகங்களை ஏற்றி மத்தள முதலிய வாத்தியங்களின் ஆரவாரத்தோடும், தீவத்தி, மத்தாப்பு முதலிய வெளிச்சங்களோடும் வாணம் வெடி முதலிய வேடிக்கைகளோடும் ஆடல்பாடல்களோடுந் தெரு வீதியிற்கொண்டு வருகிறதுபோல நீங்களும் மேற்சொல்லிய ஆடம்பரத்தோடே உற்சவங்களை நடப்பித்துவருகிறதுமன்றிச் சமயாசமயங்களுக்குத் தக்கதாய் இந்துக்களின் கோவில்களில் இருக்கிற குடைகொடி கருட்டி முதலானவைகளை இரவல்வாங்கி அவைகள் முன்போக இரதங்களைப் பின்னடத்துகிறதுமுண்டு.

௩. இந்துக்கள் தங்கள் கோவில்களில் ஆராதனைகளைச் செய்யும்போது மணி கிலுக்கித் தூபதீபங்காட்டி அன்னியபாஷையாகிய சங்கிருதத்திலே வேதமோதி இரண்டொரு மந்திரங்களைச் செபித்து வணங்குவதுபோல நீங்களும் ஆராதனை வேளைகளில் மணி கிலுக்கித் தூபதீபங்காட்டி அன்னிய பாஷையாகிய இலத்தீனில் வேதமோதி இரண்டொரு மந்திரங்களைச் செபித்து வணங்குகிறீர்கள்.

௪. இந்துக்கள் தங்கள் அசடத்தனத்திற்கொப்ப விக்கிரகங்களுக்குச் சூலம், வேல் முதலிய படைக்கலங்களைக் கற்பிப்பதுமன்றி யானை, சிங்கம், இடபம் முதலிய வாகனங்களில் அவைகளை ஏற்றுவதுபோல நீங்களும் ஈட்டி வல்லயம் வாள் முதலான ஆயுதங்களைக் கற்பித்தும் பேய்முதலான வாகனங்களில் ஏற்றுகிறீர்கள்.

௫. இந்துக்கள் இன்னின்ன தெய்வத்தினுடைய திருவிழாவென்று சொல்லி வருஷந்தோறும் பல திருவிழாக்களை நடப்பித்து அவைக்குவேண்டிய செலவுக்காகச் சனங்களை வருத்தித் தண்டல்செய்வதுபோல நீங்களும் இன்னின்ன அற்செயசிஷ்ட திருவிழாவென்று சொல்லிச் சனங்களிடத்திற் தண்டல் செய்து வருஷந்தோறும் பல திருவிழாக்களை நடப்பித்துக்கொண்டு வருகிறீர்கள்.

௬ இந்துக்களுடைய குருமாராகிய பிராமணர்கள் தங்கள் மார்க்கத்தை ஆதாயப்பொலிவுக்கினமுள்ளதாக்கி ஒவ்வொரு காரியத்திற்கென்று சொல்லிச் சனங்களிடத்திற் பணத்தை வாங்கிக்கொள்வதுபோல உங்கள் குருமாரும் இன்ன பூசைக்கு இவ்வளவென்று விதித்துச் சனங்களிடத்திற் பணம் வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

௭. இந்துக்கள் தங்களுக்குப் பிற்காலத்திலே தங்கள் பிள்ளைகள் செய்யுந் தானதருமங்களினாலே தாங்கள் நற்கதியடையலாமென்று வீணாக நம்பியிருப்பதுபோல நீங்களும் உங்களுக்குப் பிற்காலத்திலே உங்கள் பிள்ளைகள் முதலானவர்

கள் செய்யும் பூசை கிரியாதிகளினாலே உத்த
ரிக்கிற ஸ்தலத்தினின்று நீங்கி மோட்சமடைய
லாமென்றெண்ணுகிறீர்கள்.

௮. இந்துக்கள் வெறும் பிளுக்காய்ச் சாம்ப
லை நெற்றியிலே பூசிக்கொள்வது போல நீங்க
ளும் வருஷத்தில் ஒரு முறை குருத்தோலை சுட்
டு அதின் சாம்பலை நெற்றியிலே பூசுகிறீர்கள்.

௯. இந்துக்கள் வீணாய்த் தங்கள் சரீரங்க
ளை வதைத்து முட்பாதுகை அரிகண்டம் முத
லானவைகளைத் தரித்துக்கடுந் தபசுகளைச் செ
ய்வதுபோல நீங்களும் ஐந்து மணி கயிறு, மு
ட்சாட்டை, பிரம்பு, வார் முதலியவைகளால்
உங்கள் சரீரங்களை வதைத்துக் கடுந் தப்புச்
செய்கிறீர்கள்.

௰. இந்துக்கள் வீண் அலைச்சலாய்க் காசி, இரா
மேசுரம் முதலான ஸ்தலங்களுக்கு யாத்திரை
பண்ணிக் காணிக்கைகளையும் மற்றுந் நேர்த்தி
க்கடன்களையுஞ் செலுத்துவதுபோல நீங்களு
ம் எலாக் குறிச்சி, வேளாகண்ணி, கிளாலி, பு
துமடம் முதலான ஸ்தலங்களுக்குப் போய்க்
காணிக்கைகளையும் மற்ற நேர்த்திக்கடனையுஞ்
செலுத்திவருகிறீர்கள்.

௰௧. இந்துக்கள் தங்கள் அறியாமையினாலே
மாரியம்மை, பிள்ளையார் முதலிய தெய்வங்
களை வணங்குவதுபோல நீங்களுந் தேவமாதா
வாகிய மரியம்மாள் அர்ச்செபஸ்டி அந்தோ
ணி, தோமை, இராயப்பர், அருளப்பர், சின்ன
ப்பர் முதலானவர்களை வணங்கிவருகிறீர்கள்.

௰௨. இந்துக்கள் தங்கள் கையிலே துளசி ம

ணி உருத்திராட்சமாலை முதலியவற்றைப் பிடித்து மந்திரங்களைச் செபிப்பதுபோல நீங்களுங் கொந்தமணி செபமாலை முதலியவற்றைக் கையிற் பிடித்து மந்திரங்களைச் செபித்துவருகிறீர்கள்.

௰௩. இந்துக்கள் அவபத்தியாய்ப் புதிய கலங்களைத் தேடிப் பெரும்பொங்கல் மாட்டுப்பொங்கல் முதலான பொங்கல்களை இடுவதுபோல நீங்களும் மூன்றிராத் திருநாள் முதலிய நாட்களிற் புதிய கலங்களைத் தேடிப் பொங்கல்களை இடுகிறீர்கள். அன்றியுஞ் சில தேசங்களில் உங்களிற் சிலர் இந்துக்களைப்போல அந்தந்த நாட்களிலே மாட்டுப்பொங்கல் பெரும்பொங்கல்களைத் தப்பாமற் செய்துவருகிறதுமுண்டு.

௰௪. இந்துக்கள் மூடத்தனமாய்ப் பிடாரிமுதலிய தேவதைகளுக்கு ஆடுகோழி அறுத்துப் பலியிடுவதுபோல நீங்களுஞ் சவரியார்முதலானவர்களுக்குக் கோழியறுத்துப் பலியிடுகிறீர்கள்.

௰௫. இந்துக்கள் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமை முதலிய விரதங்களை அனுட்டித்து அந்தந்தத் தினங்களில் மாமிசமுதலிய அன்னிய பதார்த்தங்களைத் தொடலாகாதென்று கூறுவதுபோல நீங்களும் வெள்ளிக்கிழமை விரதமுதலிய விரதங்களை அனுட்டித்து அப்படிப்பட்ட தினங்களில் மாமிசத்தைத் தொடலாகாதென்று சொல்லியும் மதுபானமுதலியவைகளை விலக்காமல் இருக்கிறீர்கள்.

௰௬. இந்துக்கள் தங்கள் மடங்களில் இருக்கிற ஆசாரியர்கள் சந்நியாசத்தோடிருக்கவேண்டுமென்று குருட்டுநிபந்தனை செய்வதுபோல, நீங்களும் உங்கள் குருக்கள் சந்நியாசத்தோடிருக்கவேண்டுமென்று குருட்டுநிபந்தனைசெய்து அவர்கள் இரகசியமாய் விபசாரஞ் செய்வதற்கு இடமுண்டுபண்ணுகிறீர்கள்.

௰௭. இந்துக்கள் தேவதூஷணமாய்த் தங்கள் குருமாரைச் சுவாமிகளென்று சொல்லி அவர்களுக்கு முன்பாக விழுந்து சாஷ்டாங்கம்பண்ண அந்தக் குருமாருந் தங்களில் ஆணவங்கொண்டு அதை அங்கிகரித்துத் தங்கள் சீஷர்களுக்குஆசீர்வாதஞ்சொல்வதுபோல நீங்கள் உங்கள் குருமாரைச் சுவாமிகளென்று சொல்லிஅவர்களுக்கு முன்பாக விழுந்து வணங்க அந்தக் குருமார் அதை அங்கிகரித்து உங்களுக்குஆசீர்வாதஞ் சொல்லுகிறார்கள்.

௰௮. இந்துக்கள் சங்கராசாரியார் முதலிய மனிதர்களைத் தெய்வத்துக்குச் சரியாய்ப் பாவித்து அவர்கள் வாக்குத் தேவ வாக்கென்று சொல்லி முறைதிறம்பியிருப்பதுபோல நீங்களும் ராம நகரியிலுள்ள பாப்புவைத் தெய்வமென்றெண்ணி அவர் வாக்குத் தேவ வாக்கென்று சொல்லி முறைதவறியிருக்கிறீர்கள்.

௰௯. இந்துக்களின் குருமாராகிய பிராமணர் தங்கள் வேதத்தை எல்லாரும் பார்த்தால் தங்கள் மகிமைக்குக் குறைவு வருமென்று நினைத்துஅதை அன்னியபாஷையாகிய சங்கிருதத்தில் மறைத்துவைத்துச் சனங்களுக்குப் போதிப்

பதுபோல உங்கள் குருமாருஞ்சத்திய வேதத்தை எல்லாரும் பார்த்தறிந்தால தங்கள் மகிமைக்குக்குறைவுவருமென்றெண்ணி அதை அன்னிய பாஷையாகிய இலத்தீனிலே மறைத்துவைத்துச் சனங்களுக்குப் போதித்துவருகிறூர்கள்.

௨௰. இந்துமதத்தாரிற் சிலர் தங்கள் பரிசுத்தவான்களுடைய பல்லு, நகம் முதலியவைகளை அருச்சனைசெய்வது போல நீங்களும் இறந்துபோன சுத்தவாளருடைய என்பு, சாம்பல், மயிர் முதலியவைகளை வணங்குகிறீர்கள்.

மேற்சொல்லிய பொதுவான காரியங்களிலே நீங்களும், இந்துக்களும் ஒத்திருப்பதன்றி விவாகச் சடங்கு, சாச்சடங்கு முதலியவற்றிலும் ஒத்திருப்பதை எடுத்துக்காட்டுகிறூம்.

க. இந்துக்கள் அயபத்தியினுலே இன்ன மாதத்திலே இன்ன நாளிலே விவாகஞ் செய்யலாம், இன்ன தினத்திலே செய்யலாகாதென்று குறிப்பதுபோல நீங்களுங்காலங் குறித்து விவாகம் முடிக்கிறீர்கள்.

௨. இந்துக்கள் தேவனே சாட்சியென்பதை மறந்து அக்கினி சாட்சியென்று ஓமம் வளர்ப்பது பொல நீங்களும் ஓமம் வளர்க்கிறதுமன்றிச் சில இடங்களிலே பிராமணர்களைப் போல ஓமம் வளர்க்கும்போது கிரந்தப் பாஷையிலே சிலமந்திரங்களைச் சொல்லுகிறீர்கள்.

ங. இந்துக்கள் திஷ்டி கழிக்க வேண்டுமென்று ஆலாத்தியெடுக்கிறது போல நீங்களும் ஆலாத்தியெடுக்கிறீர்கள்.

ச. இந்துக்களுள் யாதொருவர் மரண அவஸ்

ஸ்தைப்படுகிற பொழுது வாயிலே துளசித் தண்ணீரை ஊற்றுவதுபோல நீங்களும் அதற்குப் பதிலாக அவஸ்தைப் பூசை செய்து ஆசீருந்து கிறீர்கள்.

௫. இந்துக்கள் சவத்தோடே தீச்சட்டியைக்கொண்டுபோவதுபோல நீங்களுங் கொண்டு போகிறீர்கள்.

௬. இந்துக்கள் சவத்திற்குப் பின்னாக நெற்பொரி, செங்கல்மா, வெற்றிலை முதலியவைகளைப் போட்டுக்கொண்டு போவதுமன்றி வாழை, இளநீர் முதலியவைகளை வரிசையாய் வைக்கிறதுபோல நீங்களுஞ் செய்கிறீர்கள்.

௭. இந்துக்கள் பாடையுடனே பல விருதுகள் கொண்டுபோவதுபோல நீங்களுங் கொண்டுபோகிறீர்கள்.

௮. இந்துக்கள் சனிப்பிணந் தனிப்போகாதென்றுந் தங்கும் வியாழன் தன்னோடே மூன்றென்றுஞ் சொல்லிப் பிணத்துடனே கோழியையும், தாட்பாட் கட்டையையுங் கொண்டு போவதுபோல உங்களிற் சிலர் சிறிதிடங்களிலே அப்படிச் செய்கிறதுண்டு.

௯. இந்துக்கள் வாய்க்கரிசி போடுகிற நோக்கத்திற்கிணங்க நீங்களுஞ் சுற்றிவருகிறீர்கள்.

௰. இந்துக்கள் அங்கக்குடஞ் சுமந்து மூன்று முறை பிணத்தைச் சுற்றிவருவதுபோல நீங்களுஞ் சுற்றிவருகிறீர்கள்.

௰௧. இந்துக்கள் தங்கள் சாவிலே பேரன் பேர்த்திகளை நெய்ப்பந்தம் பிடிக்கச் செய்வதுபோல நீங்களும் பிடிப்பிக்கிறீர்கள்.

௰௨. இந்துக்கள் இழவுக்குப் போய்த்திரும்பி வருங்காலத்திலே தீட்டையொழித்தல்லாமல் வீட்டிற் பிரவேசிக்கப்படாதென்று நினைத்து முழுக முன் வீட்டிற் பிரவேசிக்க மாட்டார்கள், நீங்களும் அப்படியே முழுகாமல் வீட்டிற் பிரவேசிக்க மாட்டீர்கள்.

௰௩. இந்துக்கள் பால் முதலானவற்றைக் கொண்டுபோய்க் காடாற்றுகிறதுபோல நீங்களும் பால் சந்தனம் முதலானவற்றைக்கொண்டுபோய்ச் சிறிது சடங்குகளைச் செய்து கல்லறையின்மேற்றெளிக்கிறீர்கள்.

௰௪. இந்துக்கள் தலைக்கட்டுச் சடங்கைச்செய்வது போல நீங்களுஞ் செய்கிறீர்கள்.

௰௫. இந்துக்கள் மாளையம், திவசம் முதலிய அபிரயோசனமான சடங்குகளைச் செய்வது போல் நீங்களும் ஆத்துமத் திருநாள், மோட்சவிளக்கு முதலான சடங்குகளைச் செய்கிறீர்கள்.

மேற்சொல்லப்பட்டவையன்றி இந்துக்கள் செய்யுஞ் சடங்குகள் போல உங்களாலே சிலவிடங்களில் அதிகமாயுஞ் சிலவிடங்களிற் குறைவாயும் நடத்தப்படுகின்றன. அவைகளை ஒவ்வொன்றாக எடுத்து விபரித்துச் சொல்லுகில் மிகவும் விரியும் ஆதலால் இங்கே சொல்லாமல் விடுகிறோம். மேற்சொல்லப்பட்ட அஞ்ஞானக் கிரியைகளிற் சில பாப்புமார்க்கக் குருமாராலும் வேறுசில அவர்கள் அனுமதிப்படி உபதேசிமாராலுஞ் சபையாராலுஞ் செய்யப்படுகின்றன. அவைகளில் மிகுதியானவைகள் விக்கி

ரகாராதனைக்கேற்றனவும் பாவமுமாயிராமல், தேசாசாரத்திற்கடுத்தவைகளாயிருக்கின்றனவென்று சொல்வீர்கள், அப்படி ஒருபொழுதுஞ் சொல்லலாகாது. குற்றத்தை இப்படிப் பரிகரிக்கப் பார்க்கிறது தேவனுக்கு முன்பாக எவ்வளவுஞ் செல்லாதென்று அறிவீர்களாக.

உலகத்திற்கு நம்மை வேறுபடுத்தினவராகிய நமது பரம எசமானுஞ் சத்திய போதகருமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலே அருளிச்செய்யப்பட்ட சத்திய வேதாகமத்திற்கு இவைகள் நேர்விரோதமானவைகளென்று அறிவீர்களாக. மனிதர்களுக்கஞ்சி அவர்களுடைய நடையை நாடி உலக முறைமையின்படி நடந்துகொள்வோமேயானால் இனித்தெய்வ பயம் நம்மிடத்தில் உண்டென்று சொல்வதற்கு இடம் இல்லையே, உலக சிநேகம் பராபரனைப் பகைக்கிற பகையென்று அறியீர்களோ? ஆகையால் எவனாகிலும் உலக சிநேகிதனாயிருக்க மனதானால் பராபரனுக்குப் பகைஞனாயிருக்கிறான். ஐயோ! நீங்கள் கிறிஸ்தவர்களென்னும் மேன்மையான நாமத்தைத் தரித்துக்கொண்டும் அஞ்ஞானிகளுக்கொத்தபடி செய்வது மகா துரோகமும் இலச்சையுமாமே. இதே சத்துருக்கு விரோதமானதையும் உங்களுக்கு நித்திய ஆக்கினையாயும், அஞ்ஞானிகளுக்கும் அவர்கள் சேவிக்கிற பசாசுக்கும் மகிழ்ச்சியாயும் இருக்கிறதல்லவா? அந்நிய நுகத்தடியில் அவிசுவாசிகளுடனே பிணைக்கப்படாதேயுங்கள். எனெனில் நீதிக்கும் அக்கிரமத்திற்குங் கூட்டேது? இருளுடனே

வெளிச்சத்திற்கு ஐக்கமேது? பேலியாளுடனே கிறிஸ்துவுக்கு இசைவுமேது? அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? விக்கிரகங்களுடனே பராபரனுடைய தேவாலயத்திற் கொவ்வுதலுமேது? எனெனில் நாம் அவர்களுக்குள் உலாவி அவர்களுடைய பராபரனுயிருப்போம். அவர்கள் நமக்குச் சனமாயிருப்பார்களென்று பராபரன் சொன்னபடி நீங்கள் சீவனுள்ள பராபரனுடைய தேவ ஆலயமாயிருக்கிறீர்களே. ஊபடியினலே நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்களென்று கத்தர் சொல்லுகிறுர். அப்பொழுது நாம் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்குப் பிதாவாய் இருப்போம். நீங்கள் நமக்குக் குமாரருங் குமாரத்திகளுமாய் இருப்பீர்களென்று சருவத்துக்கும்வல்ல கத்தர் சொல்லுகிறுர். (௨ கொரிந். ௬. அதி. ௰௪-௰௮-வச.) இஸ்ரவெல் வீட்டாரே, கத்தர் உங்களுடனே சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள். கத்தர் சொல்லுகிறதாவது, புறச்சாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதேயுங்கள். (பேரேமியா. ௰. அதி. ௧-௨, வச.) உலகத்தார் உங்களைப் பகைக்கும்பொழுது அவர்கள் உங்களுக்கு முன்னே என்னைப் பகைத்தார்களென்று நினைக்கக் கடவீர்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகத்தார் தங்களைச் சேர்ந்தவர்களாகிய உங்களைச் சிநேகிப்பார்கள். நீங்கள் உலகத்தாராயிராமல் என்னலே உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப் பட்

டவர்களாய் இருக்கிறபடியினாலே உலகத்தார் உங்களைப்பகைக்கிறார்கள். (யோவா. ௰௫. அதி. ௰அ-௰௯, வச) அவன் தன் தகப்பனை அல்லது தாயைக் கனம்பண்ண வேண்டுவதில்லையென்றுபோதித்து இவ்விதமாய்ப் பராபரனுடைய கற்பனையை உங்கள் பாரம்பரை நியாயத்தினாலே அவமாக்கிவருகிறீர்கள். ஆ! வஞ்சகரே, இந்தச் சனங்கள் தங்கள் வாயினாலே என்னைச் சேர்ந்து தங்கள் உதடுகளினாலே என்னைக் கனம்பண்ணியுந் தங்களிருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கின்றது. அப்படியிவர்கள் மனிதர்களுடைய கற்பனைகளாகிய போதகங்களைப் போதிக்கிறவர்களாயிருந்து எனக்கு வீணாய் ஆராதனை செய்கிறார்களென்று, ஏசாயாவென்பவன் உங்களைக்குறித்து நன்றாய்த் தீர்க்கதரிசனம் உரைத்தானென்று சொன்னார். (மத்தே. ௰௫. அதி. ௬-௯, வச.) தீர்க்கதரிசன வசனமும் நமக்கு அதிக உறுதியாயிருக்கின்றது. உங்களிருதயங்களில் வெள்ளி உதயமாகிப் பொழுது விடியுமளவும் நீங்கள் இருளுள்ளதலத்திற் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்திற்கு எச்சரிக்கையாய் இருந்தால் நன்மை செய்வீர்கள். (௨. பேதுரு. ௧. அதி ௰௯. வச.) மேலும் இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்கிறயாவருக்கும் நான் அறிவிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே ஏதையாகிலுங் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைப் பராபரன் அவன் மேலே கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கத

ரிசனப் புஸ்தகத்தின் வார்த்தைகளில் ஏதையாகிலும் எடுத்துப்போட்டால் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளாகிய சீவ விருட்சத்திலும் பரிசுத்த பட்டினத்திலுமுள்ள பங்கைப் பராபரன் அவனிடத்திலிருந்து எடுத்துப்போடுவார். (அறிவி. உஉ. அதி. ௰௮-௰௯, வச.) உங்களைக் கிறிஸ்துவின் கிருபைக்குள் அழைத்தவனை நீங்களிவ்வளவு சீக்கிரமாய்விட்டுவேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பினதால் நான் ஆச்சரியப்படுகிறேன். இதுவன்றி வேறொரு சுவிசேஷமுமில்லையே, அப்படியிருந்துஞ் சிலர் உங்களைக் கலக்கப்படுத்திக் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை மாறுபாடாக்க மனதாயிருக்கிறார்கள். நாங்கள் உங்களுக்கு அறிவித்த சுவிசேஷத்தைத் தவிர நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவித்தாற் சபிக்கப்பட்டவர்களாயிருக்கக்கடவோம். ஒருவன் நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தைத்தவிர வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கறிவித்தாற் சபிக்கப்பட்டவனாகவே யிருக்கக்கடவனென்று முன் சொன்னது போல் மறுபடியுஞ் சொல்லுகிறேன். இப்பொழுது நான் மனிதரை நாடுகிறேனா அல்லது பராபரனை நாடுகிறேனா அல்லது மனிதருக்குப் பிரியமாயிருக்கப் பார்க்கிறேனா. நான் மனிதருக்குப் பிரியமானவனானால் நான் கிறிஸ்துவினூழியகாரனாயிருப்பதில்லை. மேலுஞ் சகோதரரே, நான் உங்களுக்கு நிச்சயிக்கிறதென்னவெனில் என்னாற் பிரசங்கிக்கப்ப

ட்ட விசுசேஷம் மனிதருடைய இச்சைக்கேற்ற தல்ல, நான் அதை ஒருமனிதனால் அடையவும் படிக்கவு மில்லையே. இயேசுக்கிறிஸ்துவே அதையெனக்கு வெளிப்படுத்தினார். (கலா. ௧. அதி. ௬-௰௨. வச.) பின்பு யோவானிடத்திற் போய், இரபி! உம்முடனே கூட யோர்தானின் அக்கரையிலே ஒருவரிருந்தாரே, நீரும் அவரைக்குறித்துச் சாட்சிகொடுத்தீரே, அவரும் ஞானஸ்நானங்கொடுக்கிறார். எல்லாரும் அவரிடத்திற் போகிறார்களென்றார்கள். (யோவான். ௫. அதி. ௨௬. வச.) எல்லாரும் வந்து இயேசுவின் அடைக்கலம் புகுவீர்களாக, ஆமன்.